DM CUM JM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **S.T.C.No. 19 /2021, PW -6.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குமார் | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | நாகராஜன் | Occupation | : | LIC முகவர் |
| Village | : | ஜமீன்பேரையூர் | Religion | : | - |
| Taluk | : | ஆலத்தூர் | Age | : | 49/2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.11.2025 | | | | | |

1,2 எதிர் மனுதாரர்கள் ஆஜரில்லை. கு.வி.மு. ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1,2 எதிர் மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. நீதிமன்ற முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் எனது நண்பர் என் பக்கத்து தெருவை சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு எத்தனை முறை சென்றேன் என்றால் 2 முறை சென்றேன். எதிர் மனுதாரர் பரஞ்சோதி உறவினர் மற்றும் நான் மற்றும் என்னுடன் காட்டுராஜா, மோகன் , கார்த்திக் ஆகியோர் சென்றோம். நான் இரண்டு முறை சென்றபோதும் மனுதாரர் என்னுடன் வந்து நின்றாரா என்றால் தனியாகதான் நின்றார்.

2. நான் காவல் நிலையம் போகும்போது என்னை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளரோ விசாரித்தார்களா என்றால் என்னை உதவி ஆய்வாளர் தான் விசாரித்தார். 2–வது முறை போகும்போது நானும் என்னடன் சேகரும் உதவி ஆய்வாளரிடம் சமாதானம் பேசினோம் சமாதானம் ஆகவில்லை, இன்னொரு நாள் பேசலாம் என்று வந்துவிட்டோம். 18.01.2020 ம் தேதி மனுதாரர் சேகரை அ ன்று கைது செய்யவில்லை. 18.01.2020 ம் தேதிக்கு பிறகு 5,6 நாள் கழித்து போலிசார் சேகரை கைது செய்தார்கள். கைது செய்த சேகரை அன்றே நீதியரசர் முன்னிலையில் பிணையில் விடுவித்தார். சேகர் கைதானபோது நான் காவல் ஆய்வாளரை பார்த்து பேசினேனா என்றால் பேசவில்லை. சேகர்கைதான அன்று நானும் காசிநாதன், மற்றும் புகார்தாரரின் மனைவி கற்பகம், சிலம்பரசன் ஆகியோர் வந்தார்கள்.

3. மனுதாரர் சேகரை சட்டப்படிதான் கைது செய்தார்கள் என்றும், சட்டப்படி நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்கள் என்றாலும், அவர் என் நண்பர்

எனது ஊர்க்காரர் என்பதாலும் அவர் கொடுத்த மனுவுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUM COURT, KUNNAM